**<u>அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை</u>**
***<u>Ang Mo Kio Tamil Methodist Church</u>***

***<u>17 மார்ச் 2024 ஞா யிறு ஆராதனை</u>***
<u>17 March 2024 - Sunday Service</u>

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திருமதி. மரியம் சிநேகா**
Call to Worship — Mrs. Miriam Sneha

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திருமதி. மரியம் சிநேகா**
Prayer — Mrs. Miriam Sneha

✝ **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

**<u>அன்புள்ள இயேசு நேசர்</u>**

*1. அன்புள்ள இயேசு நேசர்,*
*எனக்கெல்லாம் அவரே*
*பதினாயிரம் பேர்களில்*
*சிறந்தவர்.*
*அவர் பள்ளத்தாக்கின் லீலி,*
*எனதெல்லாம் அவரே;*
*என் ஆத்துமத்தின்*
*பிராண நாயகர்*
*துக்கத்தில் என் ஆறுதல்*
*துன்பத்தில் என தின்பம்,*
*என் கவலைகளெல்லாம்*
*தாங்குவார்.*

**அவர் பள்ளத்தாக்கின் லீலி,**
**அவர் காலை விடிவெள்ளி,**
**பதினாயிரம் பேர்களில்**
**சிறந்தவர்.**

*2. என் சஞ்சலங்கள் நீங்க*
*என் பாவம் மா அன்பாய்*
*சுமந்து அவர் ஜீவனை*
*விட்டார்;*
*நான் யாவையும் வெறுத்தேன்*
*என் நேசமீட்பர்க்காய்,*
*அவர் ஒருபோதும் கைவிட*
*மாட்டார்.*
*லோகம் என்னை வெறுத்து*
*சாத்தான் சோதித்தாலும்*
*மீட்பர் எனக்கு ஜெயம்*
*தருவார்.*

*3. கர்த்தாவின் சித்தத்திற்குக்*
*கீழ்ப்படிவேனானால்*
*எல்லாத் துன்பத்தையும்*
*ஜெயிப்பேன்;*
*எனக்குப் பயமென்ன? அவர்*
*என் பங்கானால்*
*என் ஆத்துமத்தின்*
*மன்னா அவரே*
*ஜீவ நதிகள் பாயும்*
*இராஜ்யத்தைச் சேர்கையில்*
*அவர் திருமுகத்தை நான்*
*காண்பேன்.*

✝ **மாறி வாசித்தல் *11*ம் ஞாயிறு**
**தேவ ஆராதனை புத்தகம்** பக்கம் *29*
“சங்கீதம் 32” — **சபையார் இணைந்து**
Congregation

“தேவனின் மன்னிக்கும் கிருபை”

**Psalter Reading –Page 29 “Psalm 32”**

✝ **தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Thanksgiving & Pastoral Prayer — Rev. Vijay Joseph

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord’s Prayer — Congregation

✝ **காணிக்கை பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

**<u>என் இயேசு ராஜா சாரோனின் ரோஜா</u>**

**என் இயேசு ராஜா சாரோனின் ரோஜா**
**உம் கிருபை தந்தாலே போதும்**
**அலைமோதும் வாழ்வில் அலையாமல் செல்ல**
**உம் கிருபை முன் செல்ல அருளும்**

*1.* கடல் என்னும் வாழ்வில் கலங்கும் என் படகில்
சுக்கான் பிடித்து நடத்தும் என் தேவா
கடலினைக் கண்டித்த கர்த்தர் நீரல்லோ
கடவாத எல்லையை என் வாழ்வில் தாரும்

*2.* பிளவுண்ட மலையே புகலிடம் நீரே
புயல் வீசும் வாழ்வில் பாதுகாத்தருளும்
பாரிணில் காரிருள் தேசங்கள் அணுகாமல்
பரமனே என் முன் தீபமாய் வாரும்

*3.* எதிர்க் காற்று வீச எதிர்ப்போரும் பேச
என்னோடிருப்பவர் பெரியவர் நீரெ
இயேசுவே யாத்ரையில் கரை சேர்க்கும் தேவன்
என் ஜீவ படகில் நங்கூரம் நீரே

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ ***திருமறைப் பாடம்***
***யோவான் 14 : 1 - 7***
Scripture Reading :
**John 14 : 1 - 7**

***திரு. சாலமேன்***
Mr. Solomon

***அருளுரை***
Sermon

***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Rev. Vijay Joseph

✝ ***அர்ப்பணகீதம்***
Offertory & Closing Song

***சபையார் இணைந்து***
Congregation

***<u>காலையும் மாலையும் எவ்வேளையும்</u>***

***காலையும் மாலையும் எவ்வேளையும் கர்த்தரைக்***
***கருத்துடன் பாடிடுவேன்***

***பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் எனதூதர்***
***பாடிடும் தொனி கேட்குதே***

*1. கர்த்தர் என் வெளிச்சம் ஜீவனின் பெலனும்*
*கிருபையாய் இரட்சிப்பு மானார்*
*அஞ்சிடாமல் கலங்காமல் பயமின்றி திகிலின்றி*
*அனுதினம் வாழ்த்திடுவேன்*

*2. எனக்கெதிராய் ஓர் பாளய மிறங்கி*
*என் மேல் ஓர் யுத்தம் வந்தாலும்*
*பயப்படேன் எதிராளி நிமித்தமாய் செவ்வையான*
*பாதையில் நடத்துவார்*

*3. ஒன்றை நான் கேட்டேன் அதையே நாடுவேன்*
*என்றும் தம் மகிமையைக் காண*
*ஜீவனுள்ள நாளெல்லாம் தம் ஆலயத்தில் தங்குவதை*
*வாஞ்சித்து நாடிடுவேன்*

*4. தகப்பனும் தாயும் கைவிட்டாலும் என்*
*கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்வார்,*
*எந்தன் உள்ளம் ஸ்திரமாக திடமாக கர்த்தருக்கே*
*என்றென்றும் காத்திருக்கும்*

*5. எனக்காக யாவும் செய்து முடிப்பார்*
*என் கர்த்தர் வாக்கு மாறிடார்.*
*தமக்கென்றும் பயந்திடும் பக்தர் யாவர் விருப்பமும்*
*தவறாமல் நிறைவேற்றுவார்*

***அறிவிப்புகள்***
Announcements

✝ மனப்பாட வசனங்கள்
Weekly Memory Verses
John 14 : 6
***யோவான் 14 : 6***

***சபையார் இணைந்து***
Congregation

6. ***அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்***
Closing Prayer & Benediction

***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** **/ Indicates Congregation standing**